

## திருக்குறள்

**அதிகாரம் 10 – இனியவை கூறல்**

குறள் : 97 நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்.

குறள் விளக்கம்: பிறர்க்கு நன்மையான பயனைத் தந்து நல்ல பண்பிலிருந்து நீங்காத சொற்கள், வழங்குவோனுக்கும் இன்பம் தந்து நன்மை பயக்கும்.

The words of sterling sense, to rule of right that strict adhere, To virtuous action prompting, blessings yield in every sphere

பல்லினங்கள் வாழும் நாட்டில், எந்த இனம் தமது மொழி, கலை, பண்பாட்டை இழக்காது வாழ்கின்றதோ, அந்த இனமே மற்றைய இனங்களால் பெரிதும் மதிக்கப்படும். எமது இளைய சந்ததிகளுக்கு தமிழ் மொழியைக் கற்பித்து, தமிழ் வளர்க்கும் பணியில் பெரும் சேவையாற்றும் மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையத்தின் சேவை ஒரு மிகப்பெரும் சமூகத்தொண்டு. மவுண்ட் றூயிட் தமிழக் கல்வி நிலையம் தமிழை மட்டுமன்றி மாணவர்களை பண்பு, ஒழுக்கம், பணிவு, தன்னம்பிக்கை, ஆளுமை கொண்ட சிறந்த மாணவர்களாக உருவாக்கி வருகின்றது. அது மட்டுமன்றி எமது பாடசாலை மாணவர்கள் HSCல் தமிழை ஒரு பாடமாக எடுப்பதை ஊக்குவித்து வருகின்றது. இச்சிறப்பு பெற்ற எமது கல்வி நிலையத்தில் தமிழ் கற்றிட வந்திருக்கும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் 2024ம் ஆண்டுக்கான செயற்குழு உறுப்பினர்களின் அன்பான வணக்கம். இச்செய்திமடல் மூலம் பின்வரும் விடயங்களை உங்கள் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்.

### 1. பாடசாலை விபரம்

| | |
|---|---|
| வகுப்புகள் / **Classes :** | முன்பள்ளி முதல் ஆண்டு 12 HSC தமிழ் வரை / **Preschool to HSC** |
| நடைபெறும் இடம் / **Centre Location :** | **Colyton Public School**, 43 - 81 Nelson Street, Mount Druitt, NSW 2770 |
| மின்னஞ்சல் / **Email :** | mtdruitttsc@gmail.com |
| இணையத்தளம் /**Website :** | www.mtsc.org.au |
| முகப்புத்தகம் / **Facebook :** | https://www.facebook.com/mtdruitt.tamilstudycentre.1 |
| கைப்பேசி / **Mobile Phone :** | 0413 229 638 |

பாடசாலை தொடர்பான மேலதிக விபரங்களுக்கு :

### 2. பாடசாலை நேரம் - பி.ப. 2:00 மணி முதல் பி.ப. 5:00 மணிவரை

பிள்ளைகளை பாடசாலைக்கு பி.ப. 1.55 மணிக்கு அனுப்பிவைக்குமாறும்,
பாடசாலை முடிவடையும் போது தாமதமாகாமல் வந்து அழைத்துச் செல்லுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

| | |
|---|---|
| ஆரம்பமாகும் நேரம் : | பி.ப. 2.00 மணி |
| இடைவேளை : | பி.ப. 3.30ல் இருந்து பி.ப. 3.45 மணி வரை |
| முடிவடையும் நேரம் : | பி.ப. 5.00 மணி |

### 3. 2024ம் ஆண்டு பாடசாலையின் முக்கிய திகதிகள்

நான்காம் தவணை : 19.10.2024 முதல் 21.12.2024 வரை *

| | |
|---|---|
| ஆண்டிறுதிப் பரீட்சை : | 23.11.2024 |
| ஆண்டிறுதி மாணவர் தேர்ச்சி அறிக்கை : | 14.12.2024 |
| ஒளி விழா, பரிசளிப்பு விழா மற்றும் புதிய செயற்குழு தெரிவு : | 21.12.2024 |




### 4. *வருடாந்த பரிசளிப்பு விழா 2024 (21.12.2024 சனிக்கிழமை அன்று மாலை 4.00 மணி முதல்)*

எமது பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா மற்றும் நத்தார் கொண்டாட்டமும் இராப்போசன விருந்தும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 21ம் திகதி (21.12.2024) சனிக்கிழமை அன்று மாலை 4.00 மணிக்கு **GREATER WESTERN SYDNEY PERFORMING ARTS CENTRE, PLUMPTON HIGH SCHOOL (141 Hyatts Road, PLUMPTON NSW 2761)** பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைவரும் இவ்விழாவிற்கு வருகை தந்து சிறப்பிப்பதுடன் நீங்கள் பாடசாலை வாகன தரிப்பிடத்தை பயன்படுத்தலாம் என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### 5. *ஆண்டிறுதிப் பரீட்சை 2024*

மாணவர்களுக்கான ஆண்டிறுதிப் பரீட்சைகள் 23.11.2024 அன்று முதல் வகுப்பு ஆசிரியர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்படும். இதில் வாசிப்பு, கேட்டு கிரகித்தல், பேசுதல், எழுத்துப்பரீட்சை என்பன அடங்கும். எனவே பரீட்சை தொடர்பான விபரங்களை உங்களது பிள்ளைகளின் வகுப்பு ஆசிரியர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளவும். அத்துடன் ஆண்டிறுதி மாணவர் தேர்ச்சி அறிக்கை 14.12.2024 அன்று வழங்கவும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம்.

### 6. *கலை விழா 2024*

**புகைப்படங்களைப் பார்வையிட இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :**

29.09.2024 அன்று நடைபெற்ற எமது பாடசாலைக் கலை விழா அனைவருக்கும் பெருவிருந்தாக அமைந்திருந்தது. பல புதிய நிகழ்ச்சிகளை பாடசாலை நிர்வாகம் ஒழுங்குபடுத்தியது மட்டுமன்றி மாணவர்களது பல்வேறுபட்ட நிகழ்வுகள் இவ்விழாவில் இடம்பெற்று பற்பல மாணவர்களது கன்னி நிகழ்வுகளும் மேடையேறி அனைவரதும் பராட்டைப் பெற்றுத்தந்தது. இவ்விழாவில் கலந்து சிறப்பான ஆற்றலை வெளிப்படுத்திய மாணவ செல்வங்களுக்கும் அவர்களை ஊக்கப்படுத்திய பெற்றோர்களுக்கும் அதனை அழகுற வடிவமைத்து வழங்கிய ஆசிரியர்களுக்கும் பாடசாலையின் நிர்வாகத்தின் சார்பில் பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

### 7. *வாணி விழா (சரசுவதி பூசை)*

கடந்த 19.10.2024 அன்று பாடசாலை மண்டபத்தில் இடம் பெற்ற வாணி விழாவில் நிகழ்வில் கலந்து சிறப்பித்த மாணவ செல்வங்களுக்கும் அவர்களை ஊக்கப்படுத்திய பெற்றோர்களுக்கும் அதனை திறம்பட தொகுத்து வழங்கிய ஆசிரியர்களுக்கும் பாடசாலையின் நிர்வாகத்தின் சார்பில் பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

### 8. *ஆசிரியர் தின விழா*

கடந்த 26.10.2024 அன்று எமது பாடசாலையினால் முதன் முதலாக கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களை பாராட்டி கௌரவிப்பதற்காக ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டது. ஆசிரியர்கள் மாணவர்களாகவே மாறி பலதரப்பட்ட நிகழ்ச்சிகளை வழங்கியிருந்தார்கள். பாடசாலையின் நிர்வாகத்தின் சார்பில் அவர்களை வாழ்த்தி வணங்குகின்றோம்.

### 9. *பெற்றோர் கலந்துரையாடல்*

கடந்த முறை பரீட்சார்த்தமாக வகுப்பு ரீதியாக நடைபெற்ற பெற்றோர் கலந்துரையாடல் பெற்றோர்களிடத்தும் ஆசிரியர்களிடத்தும் மிகுந்த வரவேற்பை பெற்றிருந்தது. பல பெற்றோர்கள் முதல்முறையாக தம் பிள்ளைகளின் ஆசிரியர்களை சந்திப்பதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்திருந்தது. கலந்து கொண்ட பெரும்பாலான பெற்றோர்கள் இவ்வாறான பெற்றார் ஆசிரியர் சந்திப்புகள் தொடர வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கு அமைய இம்முறையும் பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு வகுப்பு ரீதியாக நடைபெற உள்ளது. எனவே உங்கள் பிள்ளைகளின் வகுப்புகளுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் தாங்கள் பெற்றோர் ஆசிரியர் சந்திப்பில் கலந்து கொள்வதன் மூலம் உங்கள் பிள்ளைகள் தொடர்பான கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் பற்றி ஆசிரியர்களுடன் கலந்துரையாட சிறந்த சந்தர்ப்பமாக அமையும். இம்முறையும் பெற்றோர் கலந்துரையாடல் எதிர்வரும் **16.11.2024 மற்றும் 23.11.2024 ஆகிய சனிக்கிழமைகளில் மாலை 2.15 மணி முதல்** நடைபெற இருக்கின்றது. மாணவர்களது கற்றல் தொடர்பான இந்த முக்கிய கலந்துரையாடலுக்கு சகல பெற்றோர்களையும் அவர்களுக்கான நேர ஒழுங்கில் சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

### 10. *பாடசாலைக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள்*

உங்கள் பிள்ளைகளுக்கான இந்த வருடத்திற்கான பாடசாலை கட்டணத்தை இதுவரை செலுத்தாதவர்கள் தவணை நான்கு முடியும் முன் செலுத்தி பாடசாலை திறம்பட நடைபெறுவதற்கு ஒத்துழைக்குமாறு அன்பாக கேட்டுக்கொள்கின்றோம். நீங்கள் Creative Kids Voucher மூலமும் எமது பாடசாலைக் கட்டணத்தை செலுத்தலாம். Creative Kids Voucher ஊடாக உங்கள் கட்டணத்தைச் செலுத்த விரும்பின் உங்கள் பிள்ளைகளின் Creative Kids Voucher யை **vouchers@mtsc.org.au** என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலதிக விபரங்களுக்கு எமது கல்வி நிலைய பொருளாளர் திரு. த.மயூரதன் (தொலைபேசி இல : 0421 571 201) அல்லது உப பொருளாளர் திரு.அ.ரோசாந்த ரூபன் (தொலைபேசி இல : 0466 664 581) அவர்களை தொடர்பு கொள்ளவும்.

(Name: **Mount Druitt Tamil Study Centre** (Please leave transfer note with your kids name and class as reference.)
Account Number with BSB: **112 879 043215976**

### 11. இனிய தமிழ் மாலை 2024 (10.11.2024 ஞாயிற்றுக்கிழமை)

தமிழ்ப் பாடசாலைகளின் கூட்டமைப்பினால் வருடந்தோறும் நடாத்தப்படும் கலாநிதி இளங்கோ வேந்தனார் ஞாபகார்த்த புலமைப் பரீட்சையில் தோற்றி அதிவிசேட, விசேட சித்தி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு, நீண்ட கால ஆசிரியர் சேவை கௌரவிப்பு, HSC மாணவர் கௌரவிப்பு நிகழ்வுகளில் கலந்து பரிசில்களைப் பெற்ற அனைவருக்கும் பாடசாலையின் நிர்வாகத்தின் சார்பில் வாழ்த்துகளையும் பராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

### 12. இணையவழி தொலைதூரக் தமிழ்க் கல்வி

கடந்த இரண்டாம் தவணை முதல் எமது பாடசாலையினால் இணையவழி தொலைதூர தமிழ்க் கல்வி ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றது. இதில் இணைய விரும்பும் உங்களுக்கு தெரிந்த எமது தமிழ்பாடசாலைக்கு வர முடியாத தொலைவில் உள்ள மாணவர்கள் இணைந்து பயன் பெறலாம் என்பதை உங்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

### 13. மாணவர்களின் இலக்கண அறிவை மேம்படுத்தல்

ஆண்டு 7, ஆண்டு 8 மற்றும் ஆண்டு 9 மாணவர்களை உள்ளடக்கியதாக “இலக்கிய வட்டம்” என்ற நிகழ்வை ஆசிரியர்கள் ஒழுங்குசெய்திருந்தார்கள். மாணவர்கள் “நாரை விடு தூது” கவிதையை சிறப்பாக வழங்கியது மட்டுமன்றி ஆண்டு 9 மாணவர்கள் “பொம்மலாட்டம்”, அவர்களது முயற்சியில் அவர்களால் எழுதப்பட்ட புத்தகம் என்பன வெளியிடப்பட்டிருந்தது. மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம் மாணவர்களது இவ்வாறான முயற்சிகளை விருப்புடன் பராட்டுவதுடன் தொடர்ந்து இவ்வாறான முயற்சிகளுக்கு துணைநிற்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### 14. ஆசிரிய உதவியாள மாணவர்கள்

இந்த ஆண்டு முதல் HSC தமிழ் அல்லது ஆண்டு 12 வரை தமிழ் கற்ற எமது பாடசாலை மாணவர்களை அவர்களது ஆளுமையை வளர்த்தெடுக்கவும் கற்ற தமிழை பயனுள்ள வழியில் பயன்படுத்தவும் என எமது பாடசாலையில் ஆசிரிய உதவியாளர்களாக அடுத்த வருட HSC தமிழ் அல்லது ஆண்டு 12 வரை தமிழ் கற்ற மாணவர்கள் வரும் வரை உள்வாங்க எமது பாடசாலை நிர்வாகம் தீர்மானித்து அதன் முதற்கட்டமாக எமது பாடசாலையிலிருந்து இந்த வருடம் HSC பரீட்சையில் தோற்றிய இரண்டு மாணவர்களை ஆசிரிய உதவியாளர்களாக இணைந்துள்ளோம் என்பதை தங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். வருங்காலங்களிலும் இதன் மூலம் பாடசாலைக்கு தேவையேற்படும் இடத்தில் மாணவர்கள் ஆசிரிய உதவியாளர்களாக உள்வாங்கப்பட்டு பயனடைவார்கள் என நாம் நம்புகின்றோம்.

### 15. 2025ம் ஆண்டிற்குரிய பாடசாலை நிர்வாகக் குழு

எமது பாடசாலையின் 2025ம் ஆண்டின் நிர்வாகக் குழு அங்கத்தவர்களாக பங்குபற்ற விருப்பமுடையவர்கள் எமது செயலாளர் திரு. சிவசங்கர் சிவசுப்பிரமணியம் அவர்களிடம் பாடசாலை நேரத்தில் தங்களது விண்ணப்பப்படிவத்தை கையளிக்குமாறு தங்களை தயவாக கேட்டுக்கொள்கின்றோம்.

புதிய நிர்வாகக் குழு அங்கத்தவர்களாக சேர விரும்புபவர்களுக்கான விண்ணப்பப்படிவத்தை இந்த செய்திமடலுடன் இணைத்துள்ளோம். தங்களுக்கு தேவைப்படுமிடத்து வலைத்தளத்தின் வளங்கள் பகுதியிலிருந்தும் இதனை நீங்கள் தரவிறக்கம் செய்யலாம். விண்ணப்ப முடிவு திகதியான 30.11.2024 மாலை 4.30 மணிக்கு முன்பாக பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவத்தை எமது செயலாளரிடம் நேரடியாக ஒப்படைக்குமாறு தங்களை தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம். இதுவரை காலமும் பாடசாலை நிர்வாகத்தில் பங்குகொள்ளாத பெற்றோர்கள் 2025ம் ஆண்டின் பாடசாலை நிர்வாகத்தில் இணைந்து மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையத்தின் வளர்ச்சிக்கு உதவும்படி தங்களை தாழ்மையுடன் வேண்டிக்கொள்கின்றோம்.

### 16. 2025ம் ஆண்டிற்குரிய பாடசாலை நிர்வாகக் குழு அறிமுகம்

எமது பாடசாலையின் 2025ம் ஆண்டிற்கான பாடசாலை நிர்வாகக்குழுவில் இணைந்தவர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வும் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் இடம்பெற உள்ளது. இந்த வருடம் பாடசாலைக்கு பல்வேறுபட்ட சிரமங்களின் மத்தியிலும் மாணவர்களை தமிழ் பாடசாலைக்கு அழைத்துவந்த ஒவ்வொரு பெற்றோர்களுக்கும் 2024ம் ஆண்டின் நிர்வாகத்தின் சார்பில் நன்றியை கூறிக்கொள்வதுடன் வழமைபோல 2025ம் ஆண்டிற்கு தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை நிர்வாகத்திற்கு தங்களது பூரண ஆதரவினை வழங்குமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

### 17. பாடசாலை விடுமுறை

எமது பாடசாலை தவணை நான்கின் கடைசி நாளான 21.12.2024 அன்று பரிசளிப்பு விழாவுடன் நிறைவடைந்து எதிர்வரும் 08.02.2025 சனிக்கிழமை அன்று மீண்டும் புதிய வருடத்திற்கான முதலாம் தவணைக்காக திறக்கப்படும் என்பதனையும் உங்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.

நன்றி



மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலைய நிர்வாகம்.

**‘நிலம் பிரிந்து புலம் பெயர்ந்து, வளமாக நாம்வாழ்ந்தாலும்**
**தமிழ் பிரிந்து வாழாமல் எம் மொழி மறவோம்’**